DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, ATTUR.

| | | |
|---|---|---|
| Calendar | .. .. | Case No. STC. 46/2025 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| Deposition of Witness for | | PW-1 Cross Examination |
| Name | : | திரு. தீபன் |
| Father Name | : | சீனிவாசன் |
| Village | : | தெற்குகாடு |
| Taluk | : | ஆத்தூர் Age : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04-08-2026, துவக்க நேரம்: 12.05PM

எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் முன்னிலை. சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-

1) ஆஜர் எதிரிக்கு வழங்கிய தொகை அடமானக் கடன் என்றால் சரிதான். 03.10.2023 அன்று எதிரியுடன் அடமான கடன் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடன் மாத தவணையில் திருப்பி செலுத்துவதாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். வங்கி கணக்கு மூலமாகவும், தவணை தேதியில் எதிரியின் வங்கி கணக்கிலிருந்து இணைய வழியில் தொகை

எடுத்துகொள்ளப்படும், அதேபோல் நேரடியாகவும் செலுத்தலாம். எதிரிக்கு லோன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எவ்வளவு என்றால் ரூ. 6,58,328/– ஆகும். மேற்படி கடனுக்கு எதிரியின் சொத்தை அடமான பத்திரம் எழுதி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி எத்தனை தவணை தொகைகளை செலுத்தியுள்ளார் என்றால் 15 தவணைகள் செலுத்தியுள்ளார். செலுத்திய தவணை தொகைகள் போக மீதி தவணை தொகையை நிறுவனத்திற்கு செலுத்தவேண்டும் என்றால் சரிதான். மேற்படி சங்கதியை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஒரு தவணை செலுத்தவில்லை என்றால் அதிலிருந்து 30 நாட்களுக்குள் ரிசர்வ் வங்கியின் விதிகளின் படி அறிவிப்பு கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலை கூடுதல் ஆவணமாக எதிரியிடமிருந்து பெறப்பட்டதா என்றால் இல்லை. ரிசர்வ் வங்கியின் விதியின் படியும், ஒப்பந்தத்தின் படியும் காசோலையை வாங்க வேண்டும். வழக்கு காசோலை, ஒப்பந்தம் ஏற்படுத்திய போது வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையின் போது கடன் தீர்ப்பு மையத்தில் எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஒரே கடனுக்காக இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடன் வழக்கு தீர்ப்பு மையத்தில் வழக்கு வேறு, இந்த நீதிமன்றத்தில் உள்ள வழக்கு வேறு. இரண்டு வழக்குகளும் எதிரியிடமிருந்து கடனை வசூலிப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோள் வைக்கப்பட்டு, வேண்டுகோள் ஏற்கப்பட்டது.)

**சாட்சி முழுவதுமாக படித்து பார்த்து, சரியென ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.**

முடிவு நேரம் : 12.20PM

Taken Down by me in Open Court Read over to the deponent in the presence of the accused and admitted by the deponent to be correct

N MOHANASUNDARAM

Digitally signed by N MOHANASUNDARAM
Date: 2026.08.04 19:34:27 +0530

Judicial Magistrate, Fast Track Court
Attur.